**தினமலர் (08.07.2024)**

# ஆண்டுதோறும் இலவச கல்வி தரும் காகிதஆலை

**வேலாயுதம்பாளையம், ஜூலை 8–**

*புகளூர் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் பல்வேறு சமுதாய பணிகளை செய்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக ஆண்டுதோறும் புகளூர் நகராட்சிக்கு உட்பட்ட ஓனவாக்கல்மேடு கிராமத்தில் நலிவுற்ற சமுதாயத்தைச் சேர்ந்த குழந்தைகளை தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு டிஎன்பிஎல் பள்ளியில் இலவச கல்வி வழங்கி வருகிறது.*



காகிதஆலை மூலம் இலவச கல்வி பயிலும் மாணவர்களுக்கு முதன்மை பொது மேலாளர் (இயக்கம்- பொறுப்பு )நாகராஜன், பொது மேளாளர்( மனித வளம்) கலைச்செல்வன் மற்றும் முதுநிலை மேலாளர் (மனித வளம்) சிவக்குமார் ஆகியோர் இலவச பள்ளி சீருடை வழங்கினர்.

அதன்படி 2024–25ம் கல்வி ஆண்டில் எல்கேஜி பயில்வதற்காக ஓனவாக்கல்மேடு கிராமத்தைச் சேர்ந்த ஸ்ரீராம் ஈஸ்வரன், தியா ஸ்ரீ ஆகிய 2 குழந்தைகள் தேர்வு செய்யப்பட்டனர். இவர்களுக்கு 2 செட் பள்ளி சீருடை, காலணி, காலணி உறை மற்றும் பள்ளி கட்டணம் முழுவதையும் காகித ஆலை நிறுவனம் வழங்கி வருகிறது. அதன்படி இலவச கல்வி பெறும் குழந்தைகளுக்கு பள்ளி சீருடை வழங்கப்பட்டது. பள்ளிக்கட்டணம் உட்பட அனைத்து செலவினங்களையும் காகித ஆலை நிறுவனம் பள்ளி நிர்வாகத்திற்கு செலுத்திவிடும்.

2007–08ம் ஆண்டு முதல் துவங்கி நடைபெற்று வரும் இந்த இலவச திட்டத்திற்காக ஆண்டுதோறும் ரூ.13 லட்சம் செலவிடப்பட்டு வருகிறது.

அதேபோல் பட்டயப்படிப்புக்கும் கட்டணமில்லா கல்வி தமிழ்நாடு தொழில்நுட்ப கல்வித்துறையினரால் அங்கீகரிக்கப்பட்ட திருச்சி சேஷசாயி இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜியில் காகித பிரிவில் மூன்றரை ஆண்டுகள் இலவசமாக தொழில் பட்டயப்படிப்பு பயில ஆண்டுதோறும் 5 மாணவர்களுக்கு கல்விக்கட்டணம், விடுதி கட்டணம் உட்பட அனைத்து கட்டணங்களையும் காகித ஆலை நிறுவனம் செலுத்தி கட்டணமில்லா கல்வி அளித்து வருகிறது.

அதன்படி கரூர் மாவட்டத்தில் காகித ஆலை நிறுவனம் அலகு 1ஐ சுற்றி அமைந்துள்ள ஊராட்சிகள் மற்றும் திருச்சி மாவட்டம் காகித ஆலை அலகு 2ஐ சுற்றி அமைந்துள்ள ஊராட்சிகளுக்கு உட்பட்ட கிராமங்கள் ஆகியவற்றில் நிரந்தரமாக வசிப்பவராக இருந்து குறைந்தபட்சம் 10ம் வகுப்பு பொதுத்தேர்வில் முதன் முறையில் தேர்ச்சி பெற்ற மாணவ, மாணவிகளிடம் இருந்து விண்ணப்பம் பெறப்பட்டது.

10ம் வகுப்பு பொதுத்தேர்வில் அறிவியல் மற்றும் கணிதம் பாடங்களில் பெற்ற சராசரி மதிப்பெண் அடிப்படையில் தர வரிசையின்படி தர்ஷனா, பிரியதர்ஷினி, சேதுபதி ராஜா, தேவா, ஜெகதீசன் ஆகிய 5 பேர் தேர்வு செய்யப்பட்டனர்.

இத்திட்டத்திற்காக காகித ஆலை நிறுவனம் இந்த கல்வியாண்டில் ரூ.8 லட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது.

காகிதஆலை வளாகத்தில் நடந்த நிகழ்ச்சியில் காகிதஆலை முதன்மை பொது மேலாளர் (இயக்கம் பொறுப்பு )நாகராஜன், பொது மேளாளர் (மனித வளம்) கலைச்செல்வன் மற்றும் முதுநிலை மேலாளர் (மனித வளம்) சிவக்குமார் ஆகியோர், 5 மாணவர்களுக்கும் கட்டண மில்லா தொழில் பட்டயப்படிப்பு பயில்வதற்கான ஆவண கடிதம் வழங்கினர்.

தினகரன் (06.07.2024)

## தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் சார்பில்

# ₹13 லட்சத்தில் இலவச கல்வி பயில ஆணை



தமிழ்நாடு காகித ஆலை சார்பில் ரூ.13 லட்சத்தில் இலவச தொழிற்கல்வி பட்டைய படிப்புக்கான ஆணையை காகித நிறுவனத்தின் முதன்மை பொது மேலாளர் (இயக்கம்)-பொறுப்பு எஸ். நாகராஜன், பொது மேலாளர் (மனித வளம்), கே.கலைச்செல்வன், முதுநிலை மேலாளர் (மனிதவளம்) கே. எஸ்.சிவக்குமார் ஆகியோர் வழங்கினர்.

வேலாயுதம்பாளையம், ஜூலை 6: தமிழ்நாடு காகித ஆலை சார்பில் ரூ/13 லட்சம் நிதியில் இலவச தொழிற்கல்வி பட்டைய படிப்புக்கான ஆணை மற்றும் 35 குழந்தைகளுக்கு 2 செட் பள்ளிச்சீருடைகள் வழங்கும் விழா நடைபெற்றது.

வேலாயுதம்பாளையம் அருகே உள்ள காகிதபுரம் டிஎன்பிஎல் சார்பில் எல்கேஜி முதல் 12ம் வகுப்பு வரை இலவச பள்ளி கல்வியும், இவர்களுக்கான பள்ளி கட்டணம் உட்பட அனைத்து செலவினங்களையும். டிஎன்பிஎல் நிறுவனத்தின் சார்பில் 2007ம் ஆண்டு முதல் துவங்கபட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை 14 மாணவர்கள் பள்ளிப்படிப்பை முடித்துள்ளனர். மேலும் இந்த கல்வியாண்டில் 35 குழந்தைகள் பயின்று வருகின்றனர்.

மேலும் சமுதாயப்பணிகளில் ஒரு பகுதியாக, ஆண்டுதோறும், புகழூர் நகராட்சிக்குட்பட்ட ஒனவாக்கல்மேடு கிராமத்தில் உள்ள நலிவுற்ற சமுதாயத்தைச் சார்ந்த குழந்தைகளை தேர்ந்தெடுத்து, அக்குழந்தைகளுக்கு டி என் பி எல் பள்ளியில் இலவசக் கல்வி வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் 2024-2025ம் கல்வி ஆண்டில் எல்கேஜி பயில்வதற்காக ஒனவாக்கல்மேடு கிராமத்தைச் சார்ந்த .அ.வ. ஸ்ரீராம் ஈஸ்வரன் மற்றும் .ம. தியா ஸ்ரீ ஆகிய 2 குழந்தைகள் தேர்வு செய்யப்பட்டனர்.

ஒனவாக்கல்மேடு கிராமத்தைச் சார்ந்த 35 குழந்தைகள் இத்திட்டத்தின் மூலம் 2024-2025ம் கல்வி ஆண்டின் எல்கேஜி முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை இலவச பள்ளிக்கல்வி பயின்று வருகின்றனர். இலவச கல்வி பயிலும் குழந்தைகளுக்கு 2 செட் பள்ளிச்சீருடைகள், காலணி உறை மற்றும் பள்ளி கட்டணம் முழுவதும் டிஎன்பிஎல் மூலம் நேற்று முன்தினம் அக்குழந்தைகளுக்கு பள்ளிச்சீருடைகள் வழங்கப்பட்டது.

இத்திட்டத்திற்காக ஆண்டு தோறும் ரூ. 13.00 இலட்சம் செலவிடப்பட்டு வருகிறது.

கட்டணமில்லா தொழிற் பட்டயப்படிப்பு:

தமிழ்நாடு தொழில்நுட்பக் கல்வித் துறையினரால் அங்கீகரிக்கப்பட்ட திருச்சிராப்பள்ளி, சேஷசாயி இன்ஸ்டிட்யூட் ஆப் டெக்னாலஜியில் காகிதப் பிரிவில் 3 1/2 ஆண்டு கால கட்டணமில்லா தொழிற் பட்டயப்படிப்பு பயில ஆண்டுதோறும் 5 மாணவர்களுக்கு கல்வி கட்டணம் விடுதிக்கட்டணம் உட்பட அனைத்து கட்டணங்களையும் செலுத்தி தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் கட்டணமில்லாக் கல்வி அளித்து வருகின்றது.

கரூர் மாவட்டத்தில் தமிழ்நாடு செய்தித்தாள் காகித ஆலை. அலகு 1 ஐ சுற்றி அமைந்துள்ள புகழூர் நகராட்சி, புதோட்டக்குறிச்சி பேரூராட்சி மற்றும் ந.புகழூர், புன்னம், கோம்புபாளையம், திருக்காடுதுறை. வேட்டமங்கலம் ஆகிய ஊராட்சிகள் மற்றும் திருச்சி மாவட்டத்தில் தமிழ்நாடு செய்தித்தாள் காகித ஆலை, அலகு-II ஐ சுற்றி அமைந்துள்ள பொண்டிப்பட்டி, கே.பெரியப்பட்டி, சித்தாநத்தம் மற்றும் பாதிரிப்பட்டி ஆகிய ஊராட்சிகளுக்குட்பட்ட கிராமங்களில் நிரந்தரமாக வசிப்பவராக இருந்து குறைந்தபட்சம் பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் முதன் முறையில் தேர்ச்சி பெற்ற மாணாக்கர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டது. பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் அறிவியல் மற்றும் கணிதம் பாடங்களில் பெற்ற சராசரி மதிப்பெண்கள் அடிப்படையில், தரவரிசையின்படி தர்ஷனா, பிரியதர்ஷினி, சேதுபதிராஜா, தேவா மற்றும் ஜெகதீசன் ஆகிய 5 மாணவ, மாணவியர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

இத்திட்டத்தின் மூலம் இதுவரை 68 மாணவர்கள் கட்டணமில்லா தொழிற் பட்டயப்படிப்பு முடித்து பல்வேறு நிறுவனங்களில் பணியாற்றி வருகின்றனர். இக்கல்வியாண்டில் 19 மாணவர்கள் இத்திட்டத்தின் கீழ் இலவச தொழிற்கல்வி பயின்று வருகின்றனர். இத்திட்டத்திற்காக காகித நிறுவனம் தனது சமுதாய நலப்பணித் திட்டத்தின் மூலம் இந்த கல்வியாண்டில் ரூ.8.00 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற விழாவில் காகித நிறுவனத்தின் முதன்மை பொது மேலாளர் (இயக்கம்)-பொறுப்பு, எஸ்.நாகராஜன், பொது மேலாளர் (மனிதவளம்), கே.கலைச்செல்வன், முதுநிலை மேலாளர் (மனிதவளம்) கே. எஸ் சிவக்குமார் ஆகியோர் கலந்து கொண்டு வழங்கினர்.

## தினத்தந்தி (07.07.2024)



புகளூர் காகித ஆலை சார்பில்

# கட்டணம் இல்லா தொழில் கல்வி படிக்க 5 மாணவர்களுக்கு ஆவண கடிதம் வழங்கல்

நொய்யல், ஜூலை.7-

புகளூர் காகித ஆலை சார்பில் ஆண்டுதோறும் நலிவுற்ற சமுதாயத்தை சேர்ந்த மாணவர்களை தேர்ந்தெடுத்து இலவச கல்வி வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி இத்திட்டத்தின் மூலம் இந்த கல்வி ஆண்டில் இலவச கல்வி பெற 10-ம் வகுப்பு பொதுத் தேர்வில் அறிவியல் மற்றும் கணிதம் பாடங்களில் சராசரி மதிப்பெண்கள் பெற்ற தர்ஷனா, பிரியதர்ஷினி, சேதுபதி ராஜா, தேவா, ஜெகதீசன் ஆகிய 5 பேர் தேர்வு செய்யப்பட்டனர். இவர்கள் திருச்சி சேஷாயி இன்ஸ்டியூட்-ஆப் டெக்னாலஜியில் காகித பிரிவில் 3½ ஆண்டுகால தொழில் பட்டய படிப்பு படிக்க கல்வி கட்டணம், விடுதி கட்டணம் உள்பட அனைத்தையும் காகித ஆலை வழங்க உள்ளது. இதையடுத்து அந்த மாணவர்களுக்கு ஆணை வழங்கும் நிகழ்ச்சி காகித ஆலை வளாகத்தில் நடைபெற்றது. இதில், காகித ஆலை முதன்மை பொது மேலாளர் (இயக்கம்-பொறுப்பு) நாகராஜன், பொதுமேளாளர் (மனித வளம்) கலைச்செல்வன் மற்றும் முதுநிலை மேலாளர் (மனித வளம்) சிவக்குமார் ஆகியோர் கலந்து கொண்டு 5 மாணவர்களுக்கும் கட்டணமில்லா தொழில் பட்டய படிப்பு படிப்பதற்கான ஆவண கடிதத்தை வழங்கினர்.

இதேபோல இத்திட்டத்தின் மூலம் 2024 -2025-ம் கல்வி ஆண்டில் எல்.கே.ஜி. பயில்வதற்காக ஓனவாக்கல் மேடு கிராமத்தைச் சேர்ந்த ஸ்ரீராம் ஈஸ்வரன், தியா ஸ்ரீ ஆகிய 2 குழந்தைகள் தேர்வு செய்யப்பட்டனர். உணவாக்கள் மேடு கிராமத்தைச் சேர்ந்த 35 குழந்தைகள் இத்திட்டத்தின் மூலம் 2024 -2025-ம் கல்வியாண்டில் எல்.கே.ஜி. முதல் 12-ம் வகுப்பு வரை இலவச பள்ளிக்கல்வி பயின்று வருகின்றனர். இலவச கல்வி பயிலும் குழந்தைகளுக்கு 2 செட் பள்ளி சீருடை, காலணி, காலணி உறை மற்றும் பள்ளி கட்டணம் முழுவதும் காகித ஆலை நிறுவனம் சார்பில் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

**காலைக்கதிர் (07.07.2024)**

# டி.என்.பி.எல்., மாணவர்களுக்கு இலவச சீருடை வழங்கல்

**கரூர், ஜூலை 7-**

டி.என்.பி.எல்., பள்ளியில் இலவச கல்வி பயிலும், 35 மாணவர்களுக்கு இலவச சீருடை வழங்கப் பட்டது.

கரூர் மாவட்டம், புகழூர் தமிழ்நாடு செய்தி தாள் காகித ஆலை நிறுவனம் சார்பில், இலவச சீருடைகள் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. முதன்மை பொது மேலாளர் [பொ] தியாகராஜன் தலைமை வகித்தார். ஆலையின் சமுதாய பணிகள் திட்டத்தின் கீழ், நலி வுற்ற சமுதாயத்தை சேர்ந்த, 35 மாணவ, மாணவிகள் டி.என்.பி.எல்., பள்ளியில் இலவச கல்வி பயின்று வரு கின்றனர். அவர்களுக்கு இலவசமாக சீருடை வழங் கப்பட்டது.

ஆலை பொது மேலாளர் [மனிதவளம்] கலைச் செல்வன், முதுநிலை மேலாளர் [மனிதவளம்] சிவக் குமார் உள்பட பலர் பங்கேற்றனர்.